Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

நல்லூ... மாநகர ... லகம் ... யாழ்ப்ப...

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 10 [23-03-1993] செவ்வாய்க்கிழமை ஓசை 33

## மரநிழல்கூட இல்லாமல் பாடசாலை மாணவர் அவதி

கல்வி புகட்டுவதற்கு மரநிழல்தானும் இல்லாத நிலையில் ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்களும் அல்லற்படுவதாக தெரியவருகிறது. தென்மராட்சிப் பகுதியில் இருக்கும், கொடிகாமம் போக்கட்டி அரசினர் வித்தியாலயமும், கொடிகாமம் றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும், அடிப்படை வசதிகள்தானும் எதுவுமின்றி பல இன்னல்களின் மத்தியில் செயற்பட்டு வருகின்றன. போக்கட்டி அரசினர் வித்தியாலயத்தில் 125 மாணவர்களும், றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் 75 மாணவர்களும் கல்வி பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. இப் பாடசாலைகளில் அடிப்படையான அத்தியாவசியத் (4 ஆம் பக்கம் பார்க்க)

# தனி அரசொன்றிற்கு தமிழ் மக்கள் போராட்டம் நடத்துவது நியாயமே!

## 'ராவய' ஆசிரியர் விக்ரர் ஐவன் தெரிவிப்பு

(கொழும்பு)

"இந் நாட்டை ஆளுகின்ற அரசு தமிழ் பேசுகிற எம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தாத அரசு என்று உணரப்பட்ட பின்னரே தமிழ் மக்கள் தமக்கான ஒரு அரசைப்பற்றிச் சிந்தித்தார்கள். அது தவறு அல்ல. ஒரு அரசு தேவையென்று வந்ததும் அதனை நிறுவுவதற்கான ஒரு நிலப்பகுதி தேவை என்பதும் அடுத்த கட்டத் தேவையாகி வருகின்றது. அந்த வகையில் அம் மக்கள் போராடத் தலைப்பட்டதும் சரி என்றே கருதுகிறேன்." இவ்வாறு "ராவய" பத்திரிகையின் ஆசிரியர் விக்ரர் ஐவன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ்மாதாந்த பத்திரிகை ஒன்றிற்கு அளித்த பேட்டியின் போதே இவ்வாறு தெரிவித்தார். இப் பேட்டியில் மேலும் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

நிலப்பிரச்சினையில் மிக மோசமாக அம்மக்களைப் பாதித்த விடயம்தான் அரசுகளினால் திட்டமிடப்பட்டு வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் என்பது என்னுடைய கருத்தாகும். இது உடனடியாக நிறுத்தப்படுவது மட்டுமல்ல, அக் குடியேற்றங்கள் அகற்றப்படவும் அரசின் அவ்வாறான குடியேற்றத் திட்டங்களுக்கு சிங்கள மக்கள் எந்தவகையிலும் ஆதரவு கொடுக்காமலிருக்கவும் வேண்டும் என்பதையும் மிக அவசியமான ஒரு விடயமாக நான் பார்க்கிறேன்.

அதிகாரப் பரவலாக்கல் என்ற விடயத்தில் சிங்கள மக்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் நான் சொல்ல விரும்புவது இந்நாட்டின் சமாதானத்தைக் கருத்தில் கொண்டு இவ்விரு மக்களிடையேயுள்ள பயவுணர்வு நீக்கப்படும் வரை அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் சில விட்டுக்கொடுப் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் 188 ஆலயங்கள் சேதம்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் சுமார் நூற்றி எண்பத்தெட்டு இந்து ஆலயங்கள் இராணுவ நடவடிக்கைகளால் சேதமாக்கப்பட்டிருப்பதாக புள்ளிவிபரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. இவற்றில் திருத்தவேலைகள் மேற்கொள்வதற்காக இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் தேவைப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

## க. பொ. த. (உ/த) பரீட்சை விண்ணப்பங்கள் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

1993ஆம் ஆண்டிற்கான க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம் மாதம் 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் இதுவரை யாழ். மாவட்ட பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் யாழ். பிரதேச கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பிவைக்கும்படி கோரி யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளருக்கு அவசரவானொலிச் செய்திஒன்றை நேற்று அனுப்பிவைத்துள்ளார். எனினும் இவ் விண்ணப்பப்படிவங்கள் விரைவில் வந்து சேர்ந்தாலும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் பூர்த்தி செய்து அனுப்பிவைக்கப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. எனவே பரீட்சை ஆணையாளரினால் யாழ். மாவட்டத்திற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படலாம் என அறிய முடிகிறது. (பா)

## உயர்தர வகுப்புகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை மகாவித்தியாலயத்தில் க. பொ. த. உயர்தர வகுப்பில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை என தெரிவித்...

யத்தில் க. பொ. த. உயர்தர வகுப்பில் புவியியல், றோமன் கத்தோலிக்கம் ஆகிய பாடங்களையும், ஏனைய வகுப்புக் களில்...

## பிரச்சினைக்குத் தீர்வு அரசு முடிவு எடுக்கும்

### பிரேமதாசா தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதித் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட முன்னர் தனது அரசாங்கம் முடிவு ஒன்றை அறிவிக்கும் என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நேற்று தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற்கரையில் நேற்று மீனவர் சடலம் கரை ஒதுங்கியது

கிளாலிக் கடல் ஏரியில் மீன்...

## விண்ணப்பங்களை அனுப்பவும்

(யாழ்ப்பாணம்)

1993 இல் வாழ்க்கைத் திறன் கல்வியை நடைமுறைப் படுத்தும் பாடசாலைகள் மூலப் பொருள்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்துசமர்ப்பிக்கும்படி யாழ். கல்வித் திணைக்கள முறைசாரா கல்விப் பிரிவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேலும் இப்படிவங்களை அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படி சகல பாடசாலை அதிபர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

## எக்ஸ்ரே பிலிமிற்கு தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்தியசாலையில் எக்ஸ்றே பிலிம்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் அதிமுக்கிய தேவை என கருதப்படுமிடத்தே எக்ஸ்றே படம் ( 4 ஆம் பக்கம் பார்க்க )

காங்கேசன்குறித்து பேச

## செஞ்சிலுவை அதிகாரி பலாலி செல்வார்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை -சேந்தாங்குளம் வீதியூடாக குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துவருவது குறித்து இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் குழு ஒன்று ஒரு சில தினங்களில் பலாலிக்குச் செல்லவுள்ளது.

மேற்படி வீதியூடாக வாகன அணிமூலம் குடாநாட்டுக்குள் உணவுப் பொருள்களை எடுத்துவருவதில் உள்ள நடைமுறை விடயங்கள் குறித்து இவ் அதிகாரிகள் குழு பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதுடன் மேற்படி வீதியையும் நேரடியாகச் சென்று பார்வையிடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வீதியூடான வாகன அணிகளின் போக்குவரத்து மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் பாதுகாப்பு நிதிய

வுத் திகதி இம் மாதம் 31 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. இருந்தும் இதுவரை யாழ். மாவட்ட பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் யாழ். பிரதேச கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பிவைக் செய்திஒன்றை நேற்று அனுப்பி வைத்துள்ளார். எனினும் இவ் விண்ணப்பப்படிவங்கள் விரைவில் வந்து சேர்ந்தாலும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் பூர்த்தி செய்து அனுப்பிவைக்கப்படுமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. எனவே பரீட்சை ஆணையாளரினால் யாழ். மாவட்டத்திற்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படலாம் என அறிய முடிகிறது. (பா)

## உயர்தர வகுப்புகளுக்கு ஆசிரியர் பற்றாக்குறை

(வடமராட்சி கிழக்கு)

உடுத்துறை மகாவித்தியாலயத்தில் க. பொ. த. உயர்தர வகுப்பில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை என தெரிவிக்கப்படுகிறது,

இதனால் க.பொ. த. உயர்தர வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்கள் பாதிப்படைந்துள்ளார்கள்.

இவ்வருட ஆரம்பத்தில் இப் பாடசாலையிலிருந்து நான்கு ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டார்கள். மேலும் நான்கு ஆசிரியர்கள் பயிற்சிக்காக ஆசிரிய கலாசாலைக்குச் சென்றுவிட்டார்கள்.

ஆனால் நான்கு ஆசிரியர்கள் மட்டுமே இவ்வித்தியாலயத்திற்கு இடமாற்றத்தில் வந்துளார்கள்.

தற்போது இவ் வித்தியாலயத்தில் க. பொ. த. உயர்தர வகுப்பில் புவியியல், றோமன் கத்தோலிக்கம் ஆகிய பாடங்களையும், ஏனைய வகுப்புக்களில் அழகியல் பாடங்களையும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் க. பொ. த. உயர்தர வகுப்பு உள்ள ஒரே ஒரு மகாவித்தியாலயம் இதுவாகும்.

வருடா வருடம் இவ்வித்தியாலயத்திலிருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று வருகின்றார்கள். பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இவ்விடயத்தினை கல்வித் திணைக்களத்திற்கு நேரடியாகச் சென்று முறையிட்டுள்ளது. (36)

## முறைசாரா கல்வி நெறிக்கு போதிய நிதி கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள முறைசாராப் பகுதியினரால் மேற்கொள்ளப்படுகின்ற தொழில் திறன் கற்கை நெறிகளுக்கென இவ்வாண்டு மாணவர்களிடம் இருந்து ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் இக்கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கு வட-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு போதிய நிதியினை அனுப்பி வைக்காமையினால் தொழில் திறன் கற்கை நெறிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

மேற்படி கற்கை நெறிகளை ஆரம்பிப்பதற்கென யாழ். கல்வித்திணைக்கள முறைசாராப் பகுதியினர் வட-கிழக்கு மாகாண கல்வியமைச்சிடம் இருந்து சுமார் 7 இலட்சம் ரூபாவை கோரியிருந்தனர். இருந்தும் அந்த அமைச்சு சுமார் இரண்டு இலட்சத்து 68 ஆயிரம் மட்டுமே ஒதுக்கியுள்ளது. இதனைத் தொடர்ந்து கற்கை நெறிகளை தொடங்க முடியாத ஒரு நிலை உள்ளதாக அறியமுடிகின்றது இருந்தும் மேற்படி கற்கை நெறிகளை மேற்கொள்வதற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அன்னை திரேசா மட்டு. விஜயம்

[கொழும்பு]

எதிர்வரும் ஏப்ரல் மாத பிற்பகுதியில் அன்னைதிரேசா மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளார். இதற்கு முன்பாக பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, இந்தியா ஆகிய நாட்டு அருட்செல்விகள் ஐவர் இம்மாத முற்பகுதியில் திருக்கோணமலைக்கு விஜயம் செய்து திருமலை மாவட்டத்தில் சமீப வன்செயல்களின் போது அநாதைகளான குழந்தைகளுக்கு புகலிடம் அளிக்கும் வகையில் அநாதை இல்லம் ஒன்றை லிங்க நகரில் அமைப்பது தொடர்பான நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

(4 ஆம்பக்கம் பார்க்க)

மேலும் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

நிலப்பிரச்சினையில் மிக ...தில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள் என்பது என்னுடைய கருத்தாகும். இது உடனடியாக நிறுத்தப்படுவது எந்தவகையிலும் ஆதரவு கொடுக்காமலிருக்கவும் வேண்டும் என்பதையும் மிக அவசியமான ஒரு விடயமாக நான் பார்க்கிறேன்.

அதிகாரப் பரவலாக்கல் என்ற விடயத்தில் சிங்கள மக்களுக்கும் புத்திஜீவிகளுக்கும் நான் சொல்ல விரும்புவது இந்நாட்டின் சமாதானத்தைக் கருத்தில் கொண்டு இவ்விரு மக்களிடையேயுள்ள பயவுணர்வு நீக்கப்படும் வரை அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் சில விட்டுக்கொடுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரச்சினைக்குத் தீர்வு அரசு முடிவு எடுக்கும்

### பிரேமதாசா தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இறுதித் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட முன்னர் தனது அரசாங்கம் முடிவு ஒன்றை அறிவிக்கும் என சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா நேற்று தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி கடற்கரையில் நேற்று மீனவர் சடலம் கரை ஒதுங்கியது

### -மேலும் இருவரைக் காணவில்லை

கிளாலிக் கடல் ஏரியில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவரின் சடலம் நேற்று கெற்பேலி கடற்கரையில் வந்து ஒதுங்கியது.

சென்ற சனிக்கிழமை இரவு மீன் பிடிக்க சென்ற மூன்று மீனவர்களில் பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த சண்முகலிங்கம் உதயகுமார் [வயது 18] என்பவரது சடலமே கரை ஒதுங்கியது. இவருடன் சென்ற பண்டிதர் குடியிருப்பைச் சேர்ந்த க. குணசீலன் [வயது 22], செ. சாந்தலிங்கம் [வயது 45] என்பவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரையும் அறியமுடியவில்லை. [86]

### மண்ணெண்ணெயுடன்

## பருத்தித்துறை வந்த கப்பல் காங்கேசன் சென்றது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கென மண்ணெண்ணெய்ப் பீப்பாக்களுடன் பருத்தித்துறை துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருந்த ''நில்கிரி'' என்ற கப்பல் திசைதிரும்பிச் சென்று விட்டது.

கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரின் அலுவலகத்தில் இருந்து மேற்படி கப்பல் கப்டனுக்கு கிடைத்த வானொலிச் செய்தி ஒன்றைத்தொடர்ந்தே இக்கப்பல் திசை திருப்பப்பட்டுள்ளது. இக்கப்பல் தற்பொழுது காங்கேசன்துறை துறைமுகத்தில் தரித்து நிற்கிறது.

குடாநாட்டுக்கென கூட்டுப் படைகளின் தலைமை அலுவலகம் அனுமதித்த சுமார் 5000 பீப்பா மண்ணெண்ணெயைகுடாநாட்டுக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கையில்இத ''நில்கிரி'' என்ற சரக்குக் கப்பல் ஈடுபட்டு வருகிறது. இரண்டாவது தடவையாக மேற்படி கப்பல் ஒரு தொகுதி மண்ணெண்ணெப் பீப்பாக்களு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பம்பாய் குண்டு வெடிப்பு பாகிஸ்தானே சூத்திரதாரி

### பம்பாய் பொலீஸ் ஆணையாளர் தெரிவிப்பு

(டில்லி,

பம்பாய் நகரை கடந்த 12 ஆம் திகதி உலுக்கிய 13 குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கும் பாகிஸ்தானே காரணம் என்பது இப்போது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது என பம்பாய் பொலீஸ் ஆணையாளர் அமர்ஜித்சிங் சம்ரா நேற்று அறிவித்தார் இதற்கு சதித்திட்டம் தீட்டியவர்களுக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; குண்டு வெடிப்பிற்கு காரணமானவர்கள் கராச்சியில் பயிற்சி பெற்றதை எல்லா சாட்சியங்களும் குறிப்பிடுகின்றன. இப்போது ஆரம்ப விசாரணைகள்முடிந்துவிட்டன. விசாரணையில் எல்லா புலனாய்வு குழுக்களும் நெருங்கி ஒத்துழைத்து வருகின்றன எனக் குறிப்பிட்ட பொலீஸ் அதிகாரி, முக்கிய சந்தேக நபர்களான மேமன் சகோதரர்களை தேடிப்பிடிப்பதே இப்போது எஞ்சியுள்ளது என்றார்.

மேமன் சகோதரர்கள் டுபாயிலிருந்து சவுதிஅரேபியாவிற்கு தப்பிச் சென்றுவிட்டதாக தெரிவிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## செஞ்சிலுவை அதிகாரி பலாலி செல்வார்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை -சேந்தாங்குளம் வீதியூடாக குடாநாட்டுக்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்துவருவது குறித்து இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக சர்வதேச செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகள் குழு ஒன்று ஒரு சில தினங்களில் பலாலிக்குச் செல்லவுள்ளது.

மேற்படி வீதியூடாக வாகன அணிமூலம் குடாநாட்டுக்குள் உணவுப் பொருள்களை எடுத்துவருவதில் உள்ள நடைமுறை விடயங்கள் குறித்து இவ் அதிகாரிகள் குழு பலாலி இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதுடன் மேற்படி வீதியையும் நேரடியாகச் சென்று பார்வையிடுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வீதியூடான வாகன அணிகளின் போக்குவரத்து மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதிகள் யாழ். வருகை

[யாழ்ப்பாணம்]

சிறுவர் பாதுகாப்பு நிதிய புனர்வாழ்வு புனரமைப்புப் பிரிவு இணைப்பாளர் பற்றிக் பிறண்புறுவறும் பிரதி இணைப்பாளர் லவிகனாட்டும் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

நேற்று யாழ்ப்பாணத்தில் அவர்கள் யாழ். அரச அதிபரைச் சந்தித்துப் பேசியதுடன், யாழ். போதனா வைத்தியசாலையையும் பார்வையிட்டனர். போதனா வைத்தியசாலையில் சிறுவர் சிகிச்சைப் பிரிவைப் பார்வையிட்டதுடன் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளருடனும் ஆலோசனை கலந்தனர்.

இன்று மானிப்பாய், சங்கானை ஆகிய இடங்களில் உள்ள புனர்வாழ்வு முகாம்களையும், சிறுவர் தொடர்பான புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்களையும் பார்வையிட உள்ளனர். இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

## பாடசாலை தாக்கப்பட்டது அமைச்சருக்கு தெரியாதாம்

அண்மையில் கிளிநொச்சியில் பாடசாலை ஒன்றின் அருகே சிறிலங்கா விமானப் படை விமானங்கள் நடத்திய தாக்குதலில் நான்கு மாணவர்கள் காயமடைந்தது குறித்து தமக்கு இதுவரை எதுவுமே தெரியாது எனக் கூறியுள்ளார் கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி ராஜமனோகரி புலேந்திரன்.

சில வாரங்களுக்கு முன்பாக வடபகுதிக்கு வந்து திரும்பிய பி. பி. ஸி. தமிழ்ப் பிரிவின் தயாரிப்பாளரான ஆனந்தி தனது விஜயம் குறித்து நேற்றைய ஒலிபரப்பில் குறிப்பிடும் போது கிளிநொச்சியில் நடைபெற்ற இந்த விமானத்தாக்குதல் பற்றியும் விபரித்தார். இத்தாக்குதல் குறித்து கொழும்பு திரும்பியபின் அமைச்சரை சந்தித்து இது பற்றிகேட்டபோது ''உண்மையில் இச்சம்பவம் நீங்கள் சொல்லும்வரை எனக்கு தெரியாது'' என பதிலளித்தார்.

இலங்கையில் போர் நடைபெறுகின்றது. பாதுகாப்பு அதிகாரிகளுக்கு யாராவது தவறான தகவலைக் கொடுத்திருக்கலாம். அதை விரைந்து செயற்படுத்துவதற்காக படையினர் தவறாக தாக்கியிருக்கலாம். இப்படி நடைபெற்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும் போது கலந்துரையாடி நடவடிக்கை எடுப்பதாகவும்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## வடிகட்டிய நீர் இல்லை ஊசிமருந்து ஏற்றுதல் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் மருத்துவ மனையில் பென்சிலின் ஊசி மருந்துக்கலவைக்கு பெரும்தட்டுப்பாடு நிலவுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாளாந்தம் சுமார் 150 நோயாளர்கள் மேற்படி ஊசி மருந்திற்காக வருவதாகவும் இவ்ஊசிக்கான மருந்தை கலக்கும் வடிகட்டிய நீர் ( டிஸ்ரீல் வாட்டர் ) மருத்துவமனையில் இல்லாமையால் நோயரளரை வெளியில் வாங்கி வரும்படி அறிவுறுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

### தென்மராட்சி வாடிக்கையாளர்கட்கு

எங்களிடம் சகல றேடியோக்கள், ரேப் றெக்கோடர்கள் மற்றும் மின்சார உபகரணங்கள், எலக்ரோனிக் ஓட்டோ மற்றிக் கடிகாரங்கள் மேசை, சுவர் மணிக்கூடுகள் உத்தரவாதத்துடன் திருத்திப் பெற்றுக்கொள்ள நாடுங்கள் டில்கா வாச் அன் றேடியோ வேச்ஸ்3, கண்டிவீதி (இலங்கை வங்கி அருகாமையில்), சாவகச்சேரி. (சி-6126)

### காணவில்லை

திருமதி தோமஸ் மேரி ஜெசிந்தா என்பவருடைய அடையாள அட்டை (585483397V) 4/2 93 அன்று கிளாலி இறங்குதுறைக்கும் பளைச்சந்திக்குமிடையில் தவறி விட்டது கண்டெடுத்தவர்கள் அவசர தேவையாக இருப்பதால் ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது 14/3 கோவில் வீதி, யாழ்ப்பாணம் எறை முகவரியில் ஒப்படைக்கவும். (4547)

### விற்பனைக்குண்டு

Supper Cup C 50 Lancer Model, C. C. 50 Humming Model [பெண்ணுக்குரியது] விற்பனைக்குண்டு. தொடர்பு 50 மணிக்கூட்டு வீதி வெலிங்டன் தியேட்டர் முன்பாக, யாழ்நகர். [4549]

### வருடாந்த குளிர்த்தி

(கொழும்புத்துறை)

தொல்புரம் கொட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்தக் குளிர்த்தி உற்சவம் எதிர்வரும் 26 ஆம்திகதி வெள்ளிக்கிழமை பி ப. 4.00 மணிக்கு விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம் பெறும்.

அடியார்களுக்குப் புதுஅரிசியில் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கப்படும். (24)

### போலிப்படி பிடிபட்டது

(தொல்புரம்)

சுழிபுரம் சத்தியக்காடு பொதுச் சந்தையில் நிறை குறைவான தராசு, படிகளைப் பாவித்து இறால் விற்றுவந்த வியாபாரி, சந்தைமேற்பார்வையாளரிடம் கையும் களவுமாகப் பிடிபட்டார்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; மேற்காணும்சந்தையில்கடந்தவியாழக்கிழமை 50 கிறாம் படிக்குப் பதிலாக அஸ்பெஸ்டஸ் கூரைத்தகட்டில் செதுக்கப்பட்ட போலிப்

## அந்தியேட்டி அழைப்பு



### திருமதி நல்லதம்பி இராசம்மா

தோற்றம்: 20-03-1932 மறைவு: 22-02-1993

திதி: 24-03-1993

நாளை (24-03-1993) புதன் கிழமை அன்னாரின் பூதர்மடம், நீர்வேலி இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
கலைவாணி வீதி,
தையிட்டி,
காங்கேசன்துறை.

தகவல்:
க. கணேசராசா
(மருமகன்)
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

(-4503)

## ஓராண்டு நினைவஞ்சலி

"செந்தமிழ் மண்ணிலே வரலாறு படைத்திடும் மாவீரர் வரிசையில்.....

வீரத் தாயவள் மடியில்



மாவீரனாக

## 90-ம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில் 19 - 09 - 1976



தாயக விடிவில் 24 - 12 - 1992

### லெப்டினன்ட் விதுர்சன்

[கதிரவேல் - கவந்தீசன் (காண்டீபன்)]

கனலாறு கடந்திட்ட காண்டீபன்
மணலாற்றில் தடம் பதித்த மாவீரன்
வரலாறு இடம் ஒதுக்கும் வாழ்வினிலே
அகலாது நீயிருப்பாய் நீடூழி.

24-12-92ல் மணலாற்று கொக்குத்தொடுவாயில் களமாடி வீரகாவியமான ஏனைய ஆறு வேங்கைகட்கும் எமது வீர அஞ்சலிகள்.

ஆரியந் தோட்டம், அல்வாய் தெற்கு, அல்வாய்.

குடும்பத்தினர், நண்பர்கள்.

(4537)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

[23-03-1993]

இகம் 06 - 01 - 1920



பரம் 21 - 02 - 1993

அமரர்

### தம்பையா சிவப்பிரகாசம்

அவர்கள்

எமது முன்னாள் தலைவரும், போசகரும் சமூக சேவையாளனுமாகிய அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்காக, இறைவனைத் துதிக்கின்றோம்.

கலைச்சுடர் சனசமூக நிலையம்,
கலைச்சுடர் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம்,
கலைச்சுடர் கிராம அபிவிருத்திச் சங்கம்.
கொய்யாத்தோட்டம். [சி-6245]

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

## அறிவித்தல்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத் திருவிழாக் காலத்திற்கான கடைகள் வழங்குகல், எதிர்வரும் 25-03-1993 (வியாழன்) காலை 10.00 மணிக்கு ஆலய வெளிவீதியில் நடைபெறும்.

நிர்வாகம்.

[4523]

## வேத ஆகம பாடசாலை ஆரம்பம்

இந்து குருமார்களுக்கான வேத சிவாகம பாடசாலை, எதிர்வரும் 25-3-93 வியாழக்கிழமை நண்பகல் 2.00 மணிக்கு, பருத்தித்துறை சிவன் கோவில் பர்வதவர்த்தனி மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந்து குருமார் ஒன்றியத்தின் சார்பில் சிவஸ்ரீ ராமநாதக்குருக்கள் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் வைபவத்தில் சகல இந்து மத குருமார்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

இந்து மதகுருமார் ஒன்றியம்
வடமராட்சிக்கிளை

[சி-6246]

## நினைவு கூருகின்றோம்...

### 1993-03-23

1985ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - கிரான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

★ கே. குமார் (கிரான் - மட்டு.)

1987ஆம் ஆண்டு யாழ் - பண்ணை காவல் நிலைய விடுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவமுகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

கில்மன் (பிலிப்புமெதினோ கீர்த்திராஜா - கள்ளிக்கட்டைக்காடு, உயிலங்குளம் - மன்னார்)

2-ம் லெப். துரை (மரியாம்பிள்ளை கிறிஸ்ரலோ - முள்ளியான் - வெற்றிலைக்கேணி)

ராஜ்மோகன் (அழகக்கோன் யூட் ராஜ்குமார் - பிரதான வீதி - இளவாலை- யாழ்.)

அருணன் (சிவசுப்பிரமணியம் ரகுராஜன் கட்டுடை, மானிப்பாய் - யாழ்.)

பண்டிதர் (வேலணை)

1988ஆம் ஆண்டு முத்தையன் கட்டுப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

லெப். நந்தன் (தம்பிராசா சிவானந்தன்- கல்வளை, சண்டிலிப்பாய் தெற்கு- யாழ்.)

முல்லைத்தீவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

ஜோர்ஜ் (வில்லியம் றொபேட் - ஈச்சிலம்பத்தை - திருமலை)

1989ஆம் ஆண்டு மணலாறு நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

தயா (த. உதயராஜ் - மட்டு.)

லெப். றெஜினோல்ட் (இராசையா சின்னராசா- சர்வோதய வீதி, புத்தூர்- யாழ்.)

மைக்கல் (சின்னப்பு ஜோன்சன் - குயின்ரன் -மணியந்தோட்டம் - யாழ்.)

1991ஆம் ஆண்டு மன்னார் சிலாவத்துறைப் பகுதி

மணிக்கு விசேட அபிஷேகம், பூசை ஆராதனை வழிபாட்டுடன் இடம் பெறும்.

அடியார்களுக்குப் புதுஅரிசியில் கஞ்சி காய்ச்சிக் கொடுக்கப்படும். (24)

## போலிப்படி பிடிபட்டது

(தொல்புரம்)

சுழிபுரம் சத்தியக்காடு பொதுச் சந்தையில் நிறை குறைவான தராசு, படிகளைப் பாவித்து இறால் விற்றுவந்த வியாபாரி, சந்தைமேற்பார்வையாளரிடம் கையும் களவுமாகப் பிடிபட்டார்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது; மேற்காணும்சந்தையில்கடந்தவியாழக்கிழமை 50 கிறாம் படிக்குப் பதிலாக அஸ்பெஸ்டஸ் கூரைத்தகட்டில் செதுக்கப்பட்ட போலிப் படியைப் பாவித்து இறால் விற்ற வியாபாரி ஒருவர் சந்தை மேற்பார்வையாளர் தி. மதியழகனிடம் பிடிபட்டுக்கொண்டார் எனத் தெரிய வருகிறது. (41)

## சூசையப்பர் விழா

(யாழ்ப்பாணம்)

புலோலி புனித. சூசையப்பர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 19ஆந் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை நடைபெற்ற புனித சூசையப்பர் திருச்சொரூப பவனியில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர்.

## மகாகும்பாபிஷேகம்

ஊரெழு வடக்கு சுன்னாகம் வீதியில் புனருத்தாரணம் செய்யப்பட்ட வேல் முருகன் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் சிவஸ்ரீ சோ. வாகீஸ்வரக்குருக்கள் தலைமையில் எதிர்வரும் வெள்ளியன்று காலையில் இடம் பெறவுள்ளது.

இருநூறு ஆண்டுகளுக்கு மேலான பழைமை வாய்ந்த இவ் ஆலயம், கடந்த நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக பாழடைந்த நிலையில் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டு வாசலில் சைக்கிள் திருட்டு

(தென்மராட்சி)

வீட்டு வாசலில் பூட்டிவிடப்பட்ட லுமாலா துவிச்சக்கர வண்டி ஒன்று களவாடப்பட்ட சம்பவம்சென்றவெள்ளிக் கிழமை இடம்பெற்றது.

இச் சம்பவம்பற்றி தெரிய வருவதாவது: கற்குழியைச் சேர்ந்த வி. கிருபாகரன் என்பவர் தனது துவிச்சக்கரவண்டியை சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் உள்ள ப.இரத்தினராசா என்பவரது வீட்டில் முன் விறாந்தையில்விட்டிருந்த போது களவாடப்பட்டுள்ளதாக தெரிவித்தார் [86]

---

தையிட்டி, காங்கேசன்துறை.

(மருமகன)
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.


(-4503)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

''செந்தமிழ் மண்ணிலே வரலாறு படைத்திடும் மாவீரர் வரிசையில்.....

வீரத் தாயவள் மடியில்
09 | 05 | 1972



மாவீரனாக
23 | 03 | 1992

## கப்டன் மணாளன் (டயஸ்)

[சண்முகநாதன் ஸ்ரீராம்]

தமிழீழ வரலாற்றுப் போரில்
4 - 02 - 1990

களத்திலே புயலெனப் புலியாய் எழுந்தாய் - எம்
உள்ளத்திலே புன்னகையுடன் பூவாய் மலர்ந்தாய்!
கொள்ளை அன்பு கொண்டு நீ எம்முடன் பேசிய
கிள்ளை மொழிகள் எம் இதயத்திலே மணாளா!
உதய சூரியனாய் உருவெடுத்தவனே - எம்
நெஞ்சத்தில் நிறைந்தவனே - உன் அன்பு
நெஞ்சத்தின் மீது கொள்கை நஞ்சைக் கட்டினாயடா
மணாளா!

தமிழ் காக்ககாலன் செய்த ஜாலத்தினால் எம்மை-இக்
கோலத்தில் விட்டுச் சென்றாயோ - ஸ்ரீராமா!
இந்த ஞாலத்தில் அழியாத நாயகனே - எங்கள்
துயர் துடைக்க துள்ளி ஓடி வராயோ
தூயவனே மணாளா!
துடிக்கின்றோம் நின் திருமுகம் காணவே ஸ்ரீ!
வெல்க! தமிழீழம்!!

இன்று (23-3-1993) செவ்வாய்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு நிறைவு விழா விருந்துபசாரத்தில் சகபோராளிகளையும் கலந்து கொள்ளுமாறு வரலாற்று வேங்கை ''கப்டன் மணாளன்'' சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.

தொல்புரம் மேற்கு, உன் பிரிவால் வாடும்
சுழிபுரம். பெற்றோர், சகோதரர், உற்றார்,
(4529) உறவினர் நண்பர்கள்.

---

01 — 1920



02 — 1993

அமரர்

## தம்பையா சிவப்பிரகாசம்

அவர்கள்

எமது முன்னாள் தலைவரும், போசகரும் சமூக சேவையாளனுமாகிய அன்னாரின் ஆத்ம ஈடேற்றத்திற்காக, இறைவனைத் துதிக்கின்றோம்.

கலைச்சுடர் சனசமூக நிலையம்,
கலைச்சுடர் கிராம அபிவிருத்தி மகளிர் சங்கம்,
கலைச்சுடர் கிராம அபிவிருத்திச் சங்கம்.
கொய்யாத்தோட்டம். [சி-6245]

---

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி

நீங்காத நினைவில்

## மார்ச் - 23



## கே. டானியல்

(மக்கள் புரட்சி எழுத்தாளர்)

மக்கள் சேவைக்காக பிறப்பு 1927-03-25

மக்கள் சேவை ஆற்றிய பின் இறப்பு 1986-03-23

''இலக்கியத்தினால் சகலதையும் சாதிக்க முடியும் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்ற மாயைத் திரையைக் கிழித்தெறிந்து விட்டு வெளியே வாருங்கள். சமூக மாற்றத்திற்கான உண்மைக்கு விசுவாசமான செயற்பாடுகள் நடக்கும்போது வெறும் பார்வையாளனாக மட்டும் நில்லாது அதன் பங்காளர் ஆகுங்கள்.

கே. டானியல்

என்றும் நினைவோடு
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தோழர்கள்,
பொதுமக்கள்.

76/2, கோவில்வீதி,
யாழ்ப்பாணம். (சி-6244)

---

பண்டிதர் (வேலணை)

1988ஆம் ஆண்டு முத்தையன் கட்டுப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**லெப். நந்தன்** (தம்பிராசா சிவானந்தன்- கல்வளை, சண்டிலிப்பாய் தெற்கு- யாழ். )

முல்லைத்தீவில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய-

**ஜோர்ஜ்** (வில்லியம் றொபேட் - ஈச்சிலம்பத்தை - திருமலை)

1989ஆம் ஆண்டு மணலாறு நாயாற்றுப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**தயா** (த. உதயராஜ் - மட்டு. )

**லெப். றெஜினோல்ட்** (இராசையா சின்னராசா- சர்வோதய வீதி, புத்தூர்- யாழ். )

**மைக்கல்** (சின்னப்பு ஜோன்சன் - குயின்ரன் -மணியந்தோட்டம் - யாழ். )

1991ஆம் ஆண்டு மன்னார் சிலாவத்துறைப் பகுதியில் சிறிலங்காப்படை முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய-

**அசோக்** (கனகரட்ணம் மோகனதாஸ் - திமிலைதீவு- புதூர் - மட்டு )

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தின் மினி முகாம் தகர்ப்பில் வீரச்சாவெய்திய-

**கப்டன் விக்கி** (சுப்பையா மகேஸ்வரன் - கட்டையர் குளம் - வவுனியா)

1992ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினர் 07-வது நாளாக மேற்கொண்ட ''ஒப்பரேசன் கஜபார'' நடவடிக்கையின் போது ஏற்பட்ட கடும்சமரில் வீரச்சாவெய்திய-

**தர்சினி** (வனிதா கந்தசாமி - வாழைச்சேனை-மட்டு.)

**நிலவன்/சிலோக்சன்** (கந்தவனம் தேவராஜா- வாகரை-மட்டு)

**லெப்.இளமாறன்/பிரியன்** (மதிவதனன் தயானந்தன்-மாணிக்கவாசர் வீதி-திருமலை)

**கப்டன் சிறீமதி** (சிவகலா துரைசிங்கம்- ஒட்டிசுட்டான்-முல்லைத்தீவு)

**லெப்-நளினி** (சாந்தி செல்லையா-முள்ளியவளை முல்லைத்தீவு)

**2-ம் லெப். அழகியநம்பி/கெங்கை** (சுப்பிரமணியம் அசோக்குமார்-நுவரெலியா-மலையகம்)

**கப்டன் மணாளன்/டயஸ்** (சண்முகநாதன் சிறிராம்-சுழிபுரம்-யாழ்)

**மான்விழி** (சிவகங்கை செல்வராஜா-அல்வாய் பருத்தித்துறை-யாழ்)

13-06-1991 அன்று மூதூர் கொட்டாபுளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின்போது யாழ் மருத்துவமனையில் வீரச்சாவெய்தி

**லெப்-நளன்/செல்லத்தம்பி** [செல்வசேகரம் கணேசலிங்கம் - 6-ம் குடியிருப்பு கிளிவெட்டி, மூதூர்- திருமலை]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம் .

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6243)

யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

உண்மைகளைப் பதிவு செய்வதோடு மட்டும் நின்றுவிடாதே. அவற்றின் மூல இரகசியங்களை துருவி அறிய முயற்சி செய்.

— இவான் பவால்லவ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23 - 08 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் 05

## ஆயுத வியாபாரிகளும் ஆயுதக் குறைப்புகளும்

இன்று உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் போரிட்டுக்கொண்டிருக்கும் மூன்றாம் உலகநாட்டு அரசுகளுக்கு மலிவு விலையில் பெருமளவு நவீன ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகள் தயாராக உள்ள வேளையில் மேற்குலக ஆயுத உற்பத்தி நிறுவனங்களும் இந்நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பதில் போட்டியிடுகின்றன.

இந்த வகையில் செக்கோ செலவோக்கிய டாங்கிகளையும், ரஷ்ய உலங் குவானூர்திகளையும் கொள்வனவு செய்யும் வாய்ப்பு சிறிலங்கா அரசாங்கத்திற்குக் கிடைத்துள்ளது. இதேவரிசையில் பீரங்கிப் படகுகளையும், ஆட்லறி பீரங்கிகளையும் கொள்வனவு செய்யும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. பிரான்சிடமிருந்து பீரங்கிப்படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

அதாவது முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகள் பனிப்போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து தேவைக்கு அதிகமாக தாம் குவித்து வைத்திருந்த ஆயுத தளபாடங்களை விற்றுப் பணம் சேர்த்து தமது நெருக்கடிகளைக் குறைக்கப் பார்க்கின்றன. இந்நிலையில் மலிவு விலையில் ஆயுதங்களை விற்பதற்கு இந்நாடுகள் முயற்சித்து வருகின்றன. அதேவேளை ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்கள் காரணமாக ஏற்பட்ட விற்பனை இழப்புக்களை ஈடு செய்யும் வகையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு ஆயுதங்களை விற்க முதலாளித்துவ உற்பத்தி நிறுவனங்களும் கடும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இந்நிலையானது உலக வல்லரசான அமெரிக்காவும், முன்னாள் சோவியத் யூனியனும் செய்து கொண்ட ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்களின் குறிக்கோள்கள் என்ன என்ற கேள்வியையும் எழுப்புகின்றன. பெரும் முக்கியத்துவத்துடனும் பிரசாரத்துடனும் கூட்டப்படும் உச்சிமாநாடுகள் மூலம் தமது கையிருப்பில் இருக்கும் ஆயுதத்தின் ஒரு சிறு பகுதியை-அவற்றிலும் ஒருபகுதி பாவனையில் இல்லாதவை-குறைப்பதற்குச் சம்மதிக்கும் இவ்வல்லரசுகள், இவ்ஆயுதங்களை ஒழிப்பதற்குப் பதில் வேறு நாடுகளுக்கு விற்பனை செய்ய முற்படுவதே மேலே கூறிய கேள்வியை...

# சொந்தபலத்துடன் வளரவே பாரதீய ஜனதா விரும்புகிறது

## - சென்னையில் அத்வானி தெரிவிப்பு

(சென்னை)

தமிழகத்தில் சொந்த பலத்துடன் கட்சியை வளர்ப்பதே பாரதீய ஜனதாக் கட்சியின் நோக்கம் ஆகும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி சென்னையில் தெரிவித்தார்

சென்னையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாரதீய ஜனதாக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் கூறுகையில்: எந்தவொரு கட்சியின் தயவும் இல்லாமல் ஆழமாக வேரூன்றுவதே நமது கட்சியின் இறுதியான நோக்கம் என்றும் தெரிவித்தார். அத்துடன் தமிழ் நாட்டில் தமது கட்சியின் செல்வாக்கு இப்போது அதிகரித்து வருவதாகவும், இக்கூட்டத்திற்கு அனுமதி மறுக்கும்படி பல்வேறு கட்சியினர் கேட்டுக் கொண்டபோதும் அவற்றை மீறி அனுமதி வழங்கியதுடன் அனைத்துப் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொண்ட தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

காஷ்மீர் தீவிரவாதிகளுடன் எந்த விதமான பேச்சுவார்த்தைகளையும் மத்திய அரசு நடத்தக்கூடாது என்று தெரிவித்த அத்வானி 1953 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த நிலைக்கு காஷ்மீர் இட்டுச் செல்லப்பட வேண்டும் என்று காஷ்மீரின் முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா கூறியயோசனைக்கும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இக்கூட்டத்திற்குத் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பெருந் தொகையானோர் கலந்து கொண்டனர் என்பதும், கூட்ட ஏற்பாடுகளைக் கவனித்தமைக்காக ஆர். எஸ். எஸ், விஷ்வ இந்து பரிஷத், பஜ்ரங்தள் போன்ற அமைப்புகளுக்கு கூட்டத்தின் இறுதியில் நன்றி தெரிவிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மதுராவில் குண்டு வெடிப்பு ஒருவர் பலி; பலர் காயம்

உத்தரப் பிரதேசத்தின் மதுரா நகரில் நேற்றுமுன்தினம் குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மற்றும் பலர் காயம் அடைந்துள்ளனர். தடைசெய்யப்பட்ட பஜ்ரங்தள் அமைப்பைச்சேர்ந்தவர்கள் வீடொன்றில் குண்டுதயாரித்துக்கொண்டிருந்த போது இக்குண்டு வெடிப்பு நேரிட்டதாகப் பொலீசார் கூறுகின்றனர். அவ்வீட்டிலிருந்து சில குண்டுகளும், பெருமளவில் வெடிப் பொருள்களும் பொலீசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## எதிர்மறைப் போக்கை பாக். கைவிட வேண்டும்

### -இந்தியா கோரிக்கை

(டில்லி)

பாகீஸ்தான் இந்தியாவின் மீது காட்டும் எதிர்மறைப் போக்கை கைவிட்டுவிடவேண்டும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ்சிங் நேற்று மக்களவையில் பேசும்போது வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில் இரு நாடுகளும் சிம்லா உடன்பாட்டின் அடிப்படையில் பேச்சு நடத்தி புரிந்துணர்வை வளர்க்கவேண்டும் என்றும், ஜம்முகாஷ்மீர் தொடர்பான எந்த ஒரு தீர்மானமும், புதுடில்லிக்கு ஏற்புடையதல்ல என்றும், இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் தூண்டிவிடும் வன்முறையே அடிப்படைப் பிரச்சினை என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக எல்லா வெளிநாடுகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும், குறிப்பிட்டார்.

அத்துடன் பாகிஸ்தான் கடைப்பிடிக்கும் விஸாக் கொள்கை காரணமாக இரு நாட்டு மக்களுக்கிடையேயும் ஏற்படும் தொடர்புகள் குறைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

## நியூயார்க்குண்டுவெடிப்பிற்கு ஈரான் பண உதவி?

[வாஷிங்டன்]

நியூயார்க் உலக வர்த்தக மையத்தில்இடம்பெற்றகுண்டு வெடிப்பு சந்தேக நபர்களில் தீவிர முஸ்லிம் மதகுரு ஒருவருக்கு ஈரான் இரகசியமாக பணம் அளித்து வந்துள்ளது என்று அமெரிக்க நியூஸ் வீக் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

பரிமாற்றம் இருந்து வந்துள்ளது என்பதை ஊர்ஜிதப்படுத்தியுள்ள அமெரிக்க உளவுப் பிரிவும், வெளிநாட்டு அமைச்சும் எவ்வளவு பணம் எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை பரிமாறப்பட்டது என்ற விபரத்தை வெளியிடவில்லை.

எனினும், உலக வர்த்தக ...

### குண்டு வெடிப்பில் அறுவர் பலி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் ஜெட்டா நகரில் குண்டு ஒன்று வெடித்ததில் ஆறுபேர் கொல்லப்பட்டதுடன் இருபத்தைந்து பேர் வரையில் காயப்பட்டுள்ளனர். இக்குண்டு வெடிப்பு நேரிட்ட இடத்திற்கு சமீபமாக இருந்த கட்டடம் ஒன்று பலத்த சேதம் அடைந்துள்ளது.

### கல்கத்தாவில் குண்டுகள் கண்டுபிடிப்பு

கல்கத்தாவில் உள்ள ஒரு பள்ளிவாசலில் நேற்று முன்தினம் நான்கு குண்டுகள் வெடிக்காத நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து வெடி குண்டுநிபுணர்களால் செயலிழக்கவைக்கப்பட்டுள்ளன.

### காங்கிரஸ் செயற்குழுக்கூட்டம்

அரியானா மாநிலத்தில்இம் மாதம் 27 ஆம் திகதியன்று காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவரும் பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்பிற்காக பத்தாயிரம் பொலீசார் பணியில்ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

### விஸா வழங்குவதில் இந்தியா கெடுபிடி

## விடுதலை நெருப்பே!

திக்குகள் அதிர
தீயவர் ஒழிய
பசியோடு வயிறது
பற்றியெரிய
விசுவரூபமெடுத்த
விடுதலை நெருப்பே
உந்தன்
அடிமுடி அறிந்து
அழிக்க முடியாமல்
பிரளயங்கள் அன்று
பின் வாங்கிச் சென்றன
வெம்மையின் முன்னால்
வெற்றி கொள்ள முடியாமல்
வெறியர் படை
மிரண்டோடியது

தேசத்தின் தாகமறிந்து
தீர்த்து வைத்த தியாகியே!
விடுதலைக்கு
மூச்சுக் கொடுத்தவளே!
காற்றுக்குள் உன்னை
காண்கிறது காலம்
தண்ணீருக்குள் உன்னை
தழுவுகிறது தமிழ்
உணவுக்குள் உன்னை
உணர்கிறது உரிமை

அந்தோ..
அண்டங்களின் ஐம்புலன்களின்
அறிவுக்கப்பாலும்
நீண்டு நீண்டு செல்லும்
நினைவானாள் பூபதி

— மாவீரர் கஸ்தூரி

நன்றி - கஸ்தூரியின் ஆக்கங்கள்

## புலிகளை ஒடுக்க தமிழக அரசு உறுதியாம்

(சென்னை)

தமிழகத்தில் விடுதலைப் புலிகளை ஒடுக்குவதில் தமிழக அரசு உறுதிபூண்டுள்ளதாக தமிழக நிதியமைச்சர் நெடுஞ்செழியன் சட்டப் பேரவையில் நேற்று தெரிவித்தார். தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டதாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் கூறினார்.

## விளையாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த புதன் பிற்பகல் இரண்டு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரிமைதானத்தில் அதிபர் திரு. வ. கயிலேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

❋ ❋

(சாவகச்சேரி)

தென்மராட்சி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளை... சனிக்கிழமையன்று நண்பகல், அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

❋ ❋

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி 20-ம் திகதி சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் வித்தியாலய அதிபர் ரு. க. பேரம்பலம் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு வேலணை கல்விக்கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ஏ.சி. நல்லையா அவர்கள் பிரதம விருந்...

இந்நிலையில் மலிவு விலையில் ஆயுதங்களை விற்பதற்கு இந்நாடுகள் முயற்சித்து வருகின்றன. அதேவேளை ஆயுதக் குறைப்பு ஒப்பந்தங்கள் காரணமாக ஏற்பட்ட விற்பனை இழப்புக்களை ஈடு செய்யும் வகையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு ஆயுதங்களை விற்க முதலாளித்துவ உற்பத்தி நிறுவனங்களும் கடும் முயற்சியில் இறங்கியுள்ளன.

இந்நிலையானது உலக வல்லரசான அமெரிக்காவும், முன்னாள் சோவியத் யூனியனும் செய்து கொண்ட ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்களின் குறிக்கோள்கள் என்ன என்ற கேள்வியையும் எழுப்புகின்றன. பெரும் முக்கியத்துவத்துடனும் பிரசாரத்துடனும் கூட்டப்படும் உச்சிமாநாடுகள் மூலம் தமது கையிருப்பில் இருக்கும் ஆயுதத்தின் ஒரு சிறு பகுதியை-அவற்றிலும் ஒருபகுதி பாவனையில் இல்லாதவை-குறைப்பதற்குச் சம்மதிக்கும் இவ்வல்லரசுகள், இவ்ஆயுதங்களை ஒழிப்பதற்குப் பதில் வேறு நாடுகளுக்கு விற்பனை செய்ய முற்படுவதே மேலே கூறிய கேள்வியை எழுப்புவதற்கு அடிப்படையாகவுள்ளது.

உலகில் ஆயுதப் பரவல் ஒப்பந்தங்களும். கட்டுப்பாட்டு ஒப்பந்தங்களும் ஆயுத உற்பத்திக்கும், பரவலுக்கும் தடை விதிக்க வேண்டுமே ஒழிய ஒருவரிடம் இருக்கும் ஆயுதத்தை ஒருவருக்குக் கைமாற்றுவதாக இருக்கக் கூடாது. அது ஆயுதக் கட்டுப்பாடும் ஆகாது. ஆனால் இன்று ஆயுதங்களைப் பெரியளவில் வைத்திருந்த நாடுகள் அவற்றை மலிவு விலையிலாவது விற்றுப் பணமீட்டவே முற்படுகின்றன. இந்நிலையானது, உலகில் ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தங்களையே கேலிக்குரியதாக்கியுள்ளன.

இதன் காரணமாக மூன்றாம் உலக நாடுகளில் நடைபெறும் உள்நாட்டுப் போர்களுக்கும் மனித உரிமைமீறல்களுக்கும் மறைமுகமாகவும், நேரடியாகவும் இந்நாடுகளே காரணமாகின்றன. இந்நிலையில் மனித உரிமைகள் பற்றியும், மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்தி பற்றியும், ஆயுதங்கள் விநியோகிக்கும் நாடுகள் கேள்வி எழுப்புவதில் எந்தவிதநியாயமும் இருப்பதாகத் தெரியவில்லை.

சிறிலங்காவைப் பொறுத்தும் இதுவே நடைமுறையில் உள்ளது. மனித உரிமை மீறல்களில் உலகில்முன்னணி ஸ்தானத்தைத் தட்டிக்கொண்ட சிறிலங்காவிற்கு முன்னர் மேற்கு நாடுகளே பிரதான கடன் வழங்கும் நாடுகளாகவும், ஆயுத விநியோக நாடுகளாகவும் இருந்தன, அந்நாடுகளே மனித உரிமை குறித்தும் பேசின. ஆகையினால் பெரியளவில் பயன் ஏதும் கிட்டவில்லை. தற்பொழுது மலிவு விலை என்பதும் சிறிலங்காவின் கவனம்கிழக்கு ஐரோப்பாவிற்குத் திரும்பியுள்ளது. அத்தோடு அவை மனித உரிமைகள் பற்றியும் பேசவில்லை. இவை சிறிலங்காவிற்குப் பெருவாய்ப்பாகும்.

இந்நிலையானது வளர்ச்சி அடைந்த, ஆயுதங்களை உற்பத்தி செய்யும் நாடுகள் ஆயுத வியாபாரம் தொடர்பான தமது இலக்கில் மாற்றம் எதையும் ஏற்படுத்தவில்லை என்பதையே காட்டுகின்றது. இதேவேளை ஆயுத விற்பனை தொடர்பான தமது கொள்கையில் மட்டும் அவை சிறு மாற்றத்தைச் செய்துள்ளது புலனாகிறது. கெடுபிடிப் போர்க் காலத்தில் நண்பர்களுக்கு மட்டும் இரகசியமாக ஆயுதத்தைக் கொடுத்தவர்கள் இப்பொழுது எவருக்கும் ஆயுதங்களைப் பகிரங்கமாக விற்கத் தயாராகி இருப்பதே அக்கொள்கை மாற்றமாகும்.

டார்.

அவர் மேலும் பேசுகையில் இரு நாடுகளும் சிம்லா உடன்பாட்டின் அடிப்படையில் பேச்சு நடத்தி புரிந்துணர்வை வளர்க்கவேண்டும் என்றும், ஜம்முகாஷ்மீர் தொடர்பான எந்த ஒரு தீர்மானமும், புதுபதாகவும், குறிப்பிட்டார்.

அத்துடன் பாகிஸ்தான் கடைப்பிடிக்கும் விஸாக் கொள்கை காரணமாக இரு நாட்டு மக்களுக்கிடையேயும் ஏற்படும் தொடர்புகள் குறைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

# நியூயார்க்குண்டுவெடிப்பிற்கு ஈரான் பண உதவி?

[வாஷிங்டன்]

நியூயார்க் உலக வர்த்தக மையத்தில்இடம்பெற்றகுண்டு வெடிப்பு சந்தேக நபர்களில் தீவிர முஸ்லிம் மதகுரு ஒருவருக்கு ஈரான் இரகசியமாக பணம் அளித்து வந்துள்ளது என்று அமெரிக்க நியூஸ் வீக் சஞ்சிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இஸ்லாமின் பெயரால் பலாத்காரத்தில் ஈடுபடும் படி தொடர்ச்சியாக உபதேசம் பண்ணி வந்த ஆத்மீகத் தலைவரான ஷெய்க் ஒமார் அப்துல் ரஹ்மானுக்கும்,தெகிரானுக்கும் இடையே பணப் பரிமாற்றம் இருந்து வந்துள்ளது என்பதை ஊர்ஜிதப்படுத்தியுள்ள அமெரிக்க உளவுப் பிரிவும், வெளிநாட்டு அமைச்சும் எவ்வளவு பணம் எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை பரிமாறப்பட்டது என்ற விபரத்தை வெளியிடவில்லை.

எனினும், உலக வர்த்தக நிலையக் குண்டு வெடிப்பைக் கண்டித்து இருக்கும் ரஹ்மான், தான் இச்சம்பவத்தில் எவ்வகையிலும் சம்பந்தப்படவில்லை என்றும் கூறியிருப்பதுடன், எகிப்தின் முபாரக் ஆட்சிக்கு எதிராகவே தமது இயக்கம் போராடி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# 49 பத்திரிகையாளர் 1992இல் கொல்லப்பட்டனர்

(நியூயோர்க்)

1992 இல் கொலையுண்ட அல்லது காணமற்போன பத்திரிகையாளரின் எண்ணிக்கை 49 என வாச்டோக் குழு தெரியப்படுத்தியுள்ளது. யுகோஸ்சுலவேக்கியாவில் யுத்த களச் செய்திகளைச் சேகரிகரும் நிருபர்களுக்கு நெஞ்சுக் கவசங்களை வழங்கவும் வாச்டோக் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

25 பத்திரிகையாளர் ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் கடந்த வருடத்தில் கொல்லப்பட்டுள்ள தாக வாச்டோக்கின் அறிக்கை கூறுகின்றது. கொலையுண்ட 25 பேர்களில் 11 பேர் துருக்கியிலும், முன்னாள் யுகோஸ்சுலவேக்கியாவில்9போரும்,சோவியத் யூனியனில் 5பேரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஏனையோர் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும், சிறிதளவு ஆசியாவிலும் கொல்லப்பட்டதாக அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# அதிபர் யெல்ட்சினுக்கு மேற்கு நாடுகள் ஆதரவு

[மாஸ்கோ]

ரஷ்யாவில் சீர் திருத்தம் கொண்டு வருவதற்குச் சரியான தலைவர் பொறிஸ் யெல்ட்சினே என்றும், அவருக்கு ஆதரவு காட்ட வேண்டும் என்றும் ரஷ்ய மக்களை ஐரோப்பிய சமூகம் கேட்டுக் கொண்டுள்ளது. ஜப்பான், போலந்து, கனடா போன்ற நாடுகளும் யெல்ட்சினுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இதேவேளை ரஷ்ய சம்பவங்கள் தமக்குக் கவலையைத் தருவதாக உக்ரையின் அதிபர் கூறியுள்ளார். பொறிஸ் யெல்ட்சின் இன்னும் விரைவாகச் செயற்பட்டிருக்க வேண்டும் என்று ஜோர்ஜியாவின் தலைவரான எட்வேர்ட் ஷெவர் நாட்சே கூறியுள்ளார்.

# கல்கத்தா குண்டுவெடிப்பு அறிக்கை விரைவில் வரும்

கல்கத்தாவில் கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பான அறிக்கையை குற்றத் தடயவியல் நிபுணர்கள் இன்னும் சில நாட்களில் சமர்ப்பிப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை பொலீஸ்கமிஷனர் தாலுக்தார் நேற்று முன்தினம் கல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் குண்டு தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே அவை வெடித்திருக்கலாம் என்று கருதுவதாகவும் தெரிவித்தார்.

கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து வெடி குண்டுநிபுணர்களால் செயலிழக்கவைக்கப்பட்டுள்ளன.

## காங்கிரஸ் செயற்குழுக்கூட்டம்

அரியானா மாநிலத்தில்இம்மாதம் 27 ஆம் திகதியன்று காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவரும் பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்பிற்காக பத்தாயிரம் பொலீசார் பணியில்ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

## விஸா வழங்குவதில் இந்தியா கெடுபிடி

(டில்லி)

பங்களாதேஷ் நாட்டவருக்கு விஸா வழங்குவதை இந்தியா இடை நிறுத்தியுள்ளது. பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களில் அண்மையில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு சம்பவங்களுக்குப் பின்னர் வெளிநாட்டவருக்கு விஸா வழங்குவதில் இந்தியா கடுமையாக இருப்பதாகவும், குறிப்பாக சார்க் பிராந்திய நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு விஸாவழங்குவதில் பல கெடுபிடிகள் காட்டப்படுவதாகவும் கூறப்படுகிறது.

## யெல்ட்சின் முடிவுக்கு எதிர்ப்பு

(மாஸ்கோ)

ரஷ்யாவில் தற்காலிக ஆணைகள் பிறப்பித்து ஆட்சி நடத்தும் அதிபர் யெல்ட்சினின் முடிவை அரசியல் சாசன நீதிமன்றம் விசாரிக்க வேண்டும் என்று ரஷ்யப் பாராளுமன்றத்தின் இருநூற்றைம்பது உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கான தீர்மானம் நேற்று முன்தினமிரவு கூடிய பாராளுமன்றத்தின் அவசரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் மேலும், உலக நாடுகளும் பாராளுமன்றங்களும் நிதானமாக செயற்பட்டு ரஷ்ய ஜனநாயகத்தை ஆபத்திற்கு உள்ளாக்கும் செயல்திட்டங்களை தவிர்க்க வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

அதிபர் யெல்ட்சினின் அரசியல் சாசன விரோத நடவடிக்கைகளுக்கு பல நாட்டுத் தலைவர்களும் அதிகார பூர்வமாக ஆதரவு அளித்திருப்பது குறித்தும் ரஷ்யப் பாராளுமன்றம் வருத்தம் தெரிவித்துள்ளது.

# விளையாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த புதன் பிற்பகல் இரண்டு மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரிமைதானத்தில் அதிபர் திரு. வ. கயிலேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

❋ ❋

(சாவகச்சேரி)

தென்மராட்சி உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களிற்கிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. வே. சுந்தரலிங்கம் நீளம் பாய்தல், தத்தி மிதித்துப் பாய்தல், 100 மீற்றர் ஓட்டம் ஆகியவற்றில் முதலிடம் பெற்று இவ்வாண்டுக்கான சிறந்த வீரராக தொடர்ந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

(மு)

❋ ❋

சங்கத்தானை ஸ்ரீமுருகன் சனசமூக நிலைய பாலர்பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டி கடந்த ஞாயிறு பிற்பகல் இரண்டு மணிக்கு மேற்படி நிலையத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் திரு. வ. கயிலேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டார். பரிசில்களை திருமதி கயிலேஸ்வரன் அவர்கள் வழங்கினார். (மு)

❋ ❋

[தென்மராட்சி]

கொடிகாமம் போக்கட்டி அரசினர் த.க. பாடசாலையில் சென்ற வெள்ளிக் கிழமை வருடாந்தமெய்வல்லுனர்போட்டி பாடசாலைமைதானத்தில்அதிபர் திரு.ச.சிவசம்புஅவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கொடிகாமம் கொத்தணி அதிபர் திரு. த. கந்தையா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார். [86]

❋ ❋

குடத்தனை கரையூர், றோ. க. த. க. பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி, அதிபர் திரு. சி. இராஜரட்ணம் தலைமையில், நாளை மறுதினம் நடைபெறவுள்ளது. [30]

❋ ❋

நடுக்குடத்தனை அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி எதிர்வரும் சனிக்கிழமையன்று நண்பகல், அதிபர் திரு. எஸ். நவரத்தினராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

❋ ❋

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி 20-ம் திகதி சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் வித்தியாலய அதிபர் ரு. க. பேரம்பலம் தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டிக்கு வேலணை கல்விக்கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. ஏ.சி. நல்லையா அவர்கள் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வெற்றியீட்டியோருக்கு பரிசில்களை வழங்கினார். மஞ்சள் இல்லம் முதலாம் இடத்தையும், சிவப்பு இல்லம் இரண்டாம் இடத்தையும், பச்சை இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

[22]

❋ ❋

யாழ் இந்துக்கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்துக்கல்லூரி இன்னிங்சாலும் 2ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது இப்போட்டி யாழ் இந்துக்கல்லூரிமைதானத்தில் 20-ம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ் இந்துக்கல்லூரி 9 விக்கெட் நஷ்டத்திற்கு 177 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் மொத்தம் 66 ஓட்டங்களைப் பெற்றது தொடர்ந்து இரண்டாவது இன்னிங்சை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி விளையாடிய போது 109 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

❋ ❋

யாழ் மத்தியகல்லூரிபழைய மாணவர்களுக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவர்களுக்குமிடையில் நடைபெற்ற 50 ஓவர் கிரிக்கெட் போட்டியில் யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் அணி 2 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. இப்போட்டி யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஞாயிற்றுக் கிழமை 21-ம் திகதி இடம் பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் பழைய மாணவர் அணி 46 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

யாழ் மத்தியகல்லூரிபழைய மாணவர் அணி 35 ஓவர்களில் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 157 ஓட்டங்களைப் பெற்றது.

ஈழநாதம்

# காங்கிரஸ் உட்கட்சி பூசல்; அவசர மத்திய குழு கூட்டம்

இந்திரா காங்கிரஸ் கட்சியினுள் எழுந்துள்ள உட்கட்சி பூசலை அடுத்து பிரதமர் நரசிம்மராவிற்கு எதிராக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து பரிசீலிக்க நேற்று கட்சியின் அவசரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இவ்வார இறுதியில் நடைபெறவுள்ள காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்கு முன்பாக கட்சியில் எழுந்துள்ள பூசலை கட்சியின் மத்திய குழு ஆராயுமென தெரிவிக்கப்படுகின்றது.

கட்சியின் தலைமைப்பதவியையும், நாட்டின் தலைமை பதவியையும் நரசிம்மராவ் வகிப்பது சரியா எனக் கட்சியினுள் கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரசிம்மராவ் வேறொருவரை காங்கிரஸ் கட்சியின் தலைவராக நியமிக்கக்கூடும் என்றும் சில அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதனிடையே பிரதமருக்கு எதிரான போக்கு கட்சியினுள் தோன்றியதையடுத்தே அவருக்குசவாலாக விளங்கும் மனித மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்பதாக வெளியான செய்திகளை மத்திய அரசு மறுத்துள்ளது.

## சிலாவத்துறையில் வீரச்சாவடைந்த

## 82 மாவீரர்களுக்கு நாவற்குழியில் அஞ்சலி

(தென்மராட்சி)

சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவடைந்த எண்பத்திரண்டு மாவீரர்களின் இரண்டாம் ஆண்டு நினைவுதினம் நாவற்குழியில் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மேற்படி மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள சரணாலயத்திற்கு அருகே நேற்று முன்தினம் மாலை 5 30 மணிக்கு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது இதில் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றிவைத்த தமிழீழ அரசியற்துறைத் துணைப்பொறுப்பாளர் திரு. கரிகாலன் மாவீரர்களின் பெற்றோர்களை அறிமுகம் செய்துவைத்தார்.

ஈகைச் சுடர்களை யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் மாவீரர்களின் உருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் யாழ் மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் திரு. தமிழன்பன், மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி மாலினி, சாவகச்சேரி வட்டவைப் பொறுப்பாளர் திரு. தமிழன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர். (மு)

## பொங்கல் விழா

[தொல்புரம்]

சுழிபுரம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் வருடாந்தப் பொங்கல் விழா வழமைபோல் நடைபெறவுள்ளது.

இப் பொங்கல் விழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி எட்டாவது நாளான எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எட்டாம் மடை பெரிய பொங்கலுடன் நிறைவு பெறவுள்ளது. (41)

## சந்திப்பு

யாழ். கல்விக் கோட்டம். வேலணைக் கல்விக் கோட்ட சேவைக்கால ஆலோசக ஆசிரியர்களுக்கான சந்திப்பு இன்று மு. ப- 9-00 மணிக்கு கல்வித் திணைக்கள முகாமைத்துவ அலுவலகத்தில் நடைபெறவிருப்பதால் சகலரையும் தவறாது சமுகந் தரும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## அமரர் டானியல் நினைவுக் கூட்டம்

(குருநகர்)

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் நடாத்தும் அமரர் கே. டானியலின் நினைவுக் கூட்டம் இன்று மாலை 4. 15 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் செல்வி சு. மாதவி தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர்அ. சண்முகதாஸ் அறிமுகவுரை நிகழ்த்துவார்.

நினைவுரைகளை கலாநிதி வண. ஏ. ஜே. வி. சந்திர காந்தன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எம். ஏ. ஆகியோர் ஆற்றுவர். (21)

## கலந்துரையாடல்

முறைசாராக் கல்விப் பிரிவில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் இறுதிப் பரீட்சை சம்பந்தமாகவும், கல்விக் கண் காட்சி தொடர்பாகவும், ஒரு கலந்துரையாடல் நாளை புதன்கிழமை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவிருப்பதனால், மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொறுப்பாசிரியர் கேட்டுள்ளார். (30)

## இலக்கிய கலை நிகழ்வு

நாளை புதன் ...

## விஞ்ஞான கண்காட்சி

விஞ்ஞான தொழில் நுட்பக் கண்காட்சி ஒன்று நாளை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## பாடசாலை

அமைச்சர் திருமதி புலேந்திரன் மேலும் அதில் குறிப்பிட்டார்.

தனது வடபகுதி விஜயம் குறித்த விபரணம் ஒன்றை ஆனந்தி ''வடபகுதி வந்தேன் கண்டேன்'' என்ற தலைப்பில் அதன் முதற்பகுதியை நேற்று வழங்கியிருந்தார்.

## பிரச்சினைக்குத்

பாராளுமன்றத் தெரிவுக் குழு தனது இறுதி அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததும், தனது அரசாங்கம் அது குறித்து ஒரு முடிவை எடுக்கும் என்றும் அதன்பின்னரே வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழ்

புகளை அனுமதிக்கத் தயாராக வேண்டும்.

இதனுடைய நோக்கம் இன்று மிக இறுகிப்போயுள்ள இப்பிரச்சினையைத் தளர்த்துவதேயன்றி மேலும் இறுக்கமடையச் செய்வதல்ல. தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு அரசியல் சக்தியை உருவாக்க அவர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு என்பதையும் ...

## எக்ஸ்ரே

எடுப்பதாக தெரியவருகின்றது

கடந்த பல மாதங்களாக எக்ஸ்றே பிலிம் வராததால் இருக்கும்குறைந்த பிலிம்களை மிகவும் தேவை என கருதும் போதே பாவித்து வருவதாகவும் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். (சி)

## பருத்தித்துறை

டன் பருத்தித்துறையை நோக்கி வந்து கொண்டிருந்த சமயமே இக்கப்பல் திசை திருப்பப்பட்டு காங்கேசன் துறையைச் சென்றடைந்துள்ளது.

பருத்தித்துறை துறைமுகத்துக்குச்செல்லும்படியே ஆரம்பத்தில் கப்பல்கப்டனுக்குப்பணிக்கப்பட்டது. பாதிவழியில் காங்கேசன்துறை முகத்துக்குச் செல்லும்படி பணிக்கப்பட்டது. மீண்டும் பருத்தித்துறைக்குச் செல்லும்படி பணிக்கப்பட்டது. இவ்வாறு மூன்று தடவைகள் மாறிமாறி பணிப்புரைகள் பிறப்பிக்கப்பட்டது. இறுதிப் பணிப்புரைக்கமைய கப்பல் காங்கேசனுக்குச் சென்று விட்டது.

இதைத் தொடர்ந்து இக்கப்பலில் வரும் மண்ணெண்ணெயைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்காக பருத்தித்துறைத் துறைமுகத்திற்குச் சென்ற யாழ். செயலக அதிகாரிகள் ஏமாற்றத்துடன் அலுவலகம் திரும்பினர்.

கப்பல் திசை திருப்பப்பட்டதைத் தொடர்ந்து யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதன் உடனடியாக கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு அவசரவானொலிச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார். மேற்படி விடயம் குறித்து யாழ். அரச அதிபர் திரு.கா. மாணிக்கவாசகர் இன்று மற்றுமொரு வானொலிச் செய்தியை ...

## 10 பேர் பலி

வடமராட்சி கிழக்கில் மூளை மலேரியா நோய் தீவிரமாக பரவி வருகின்றது. இதுவரை 10 பேர் இந்நோயினால் மரணமடைந்துள்ளார்கள்.

மலத்தியோன் இப்பகுதியிலுள்ள வீடுகளுக்கு தெளிக்கப்படாமையினால், நுளம்புத் தொல்லைகள் அதிகரித்தே இந்நோய் பரவி வருகின்றது.

அம்பன், செம்பியன்பற்று, ஆகிய இடங்களில் இந்நோயினால் மிகக் கூடுதலானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். (36

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

நல்லூர் பாணன்குளம் நாச்சியம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை 24-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி அடுத்த மாதம் 7ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். (24)

## அன்பளிப்பு

யா/அராலி சரஸ்வதி ம.வித்தியாலயத்திற்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. செ. இரத்தினதுரை அவர்கள் ரூபா 1500 பெறுமதியான மணி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.


சில்லாலை

**அத்தனாசியார் பிரதம வைத்தியசாலை**

புதிய இடம்:- 124, ஆடியபாதம் வீதி, நல்லூர்.
(கல்வியங்காடு சந்தியிலிருந்து நாயன்மார்கட்டு பக்கமாக 100 மீற்றர்)
(S. சுப்பிரமணியம் கொம்பனி முன்பாக)

சிகிச்சை நேரம்:- காலை 7.00 மணி- 1.00 மணி
பிற்பகல் 3.30 மணி- 6.00 மணி
(ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் லீவு நாள்)

சில்லாலையில் பெற்றுக் கொண்ட அதே தரத்தில் சகல எண்ணெய் வகைகளையும், மருந்து வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
எமில் அத்தனாசியார்

(4525)



**அறிவித்தல்**

சுன்னாகம் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

நேர்முகப் பரீட்சை

05. 03. 93இல் நடைபெற இருந்த விற்பனை உதவியாளருக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 25. 03. 93 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் விண்ணப்பித்தவர்களுக்கு நடைபெறவுள்ளதை அன்புடன் அறியத்தருகின்றேன்.

தனிப்பட்ட அறிவித்தல் வழங்க முடியாமைக்கு ...



யாழ் மாவட்ட

**நகைத் தொழிலாளர் சங்க அறிவித்தல்**

யாழ். மாவட்டத்தை வதிவிடமாகக் கொண்ட அனைத்து நகைத் தொழிலாளருக்குமான மேற்படி சங்கத்தின் உறுப்புரிமை விண்ணப்ப படிவம் தற்போது தற்காலிகமாக இயங்கும் சங்கக் காரியாலயமான இல 176/5, கஸ்தூரியார் வீதியில் அமைந்திருக்கும் சத்தியா நகைத் தொழிலகத்தில் 23-03-93 தொடக்கம் 31-03-93 வரையும் வழங்கப்படவிருப்பதால் அனைத்து நகைத் தொழிலாளர்களும் இக்காலப் பகுதிக்குள் சந்தாப்பணம், சேர்வுப் பணம், படிவப் பணம் ஆகியவற்றைச் செலுத்தி தம்மை மேற்படி சங்கத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் உப செயலாளர் செயலாளர்

(சி 6247)


**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



பிற்பகல் 3.30 மணி- 6.00 மணி

(ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் லீவு நாள்)

சில்லாலையில் பெற்றுக் கொண்ட அதே தரத்தில் சகல எண்ணெய் வகைகளையும், மருந்து வகைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

வைத்திய கலாநிதி
எமில் அத்தனாசியார்

(4525)

## அறிவித்தல்

சுன்னாகம் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

### நேர்முகப் பரீட்சை

05. 03. 93இல் நடைபெற இருந்த விற்பனை உதவியாளருக்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 25. 03.93 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் விண்ணப்பித்தவர்களுக்கு நடைபெறவுள்ளதை அன்புடன் அறியத்தருகின்றேன்.

தனிப்பட்ட அறிவித்தல் வழங்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றேன.

குறிப்பு:-

விண்ணப்பத்தாரர் வரும் போது பின்வரும் ஆவணங்களை கொண்டு வரவும்.

1 கல்வித்தகைமை சான்றிதழ்
2. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
3. கிராம சேவையாளர் நற்சான்றிதழ்

இவ்வண்ணம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள
தலைவர்

(4548)

### தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடம்

## மொழி பெயர்ப்பாளர்கள் தமிழ் ஆங்கிலம்

ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி பெயர்க்கும் அனுபவம் வாய்ந்த மொழி பெயர்ப்பாளர்கள் தங்களது அனுபவ அத்தாட்சிப்பத்திரங்களுடன் 25-03-93 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல் துறை அலுவலகத்திற்கு சமுகந்தரவும். தபால்மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பா. நடேசன்
பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

(சி/6242)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

வண. ஏ. ஜே. வி. சந்திர காந்தன், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எம். ஏ. ஆகியோர் ஆற்றுவர். (21)

### கலந்துரையாடல்

முறைசாராக் கல்விப் பிரிவில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் இறுதிப் பரீட்சை சம்பந்தமாகவும், கல்விக் கண் காட்சி தொடர்பாகவும், ஒரு கலந்துரையாடல் நாளை புதன்கிழமை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவிருப்பதனால், மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொறுப்பாசிரியர் கேட்டுள்ளார். (30)

### இலக்கிய கலை நிகழ்வு

நாளை புதன் ழமை காலை 9.00 மணிக்கு ''சாளரம்'' வெளியீட்டாளர்களும் கோண்டாவில் இராமகிருஷ்ண மிஷன் கல்லூரியினரும் இணைந்து நடத்தும் இலக்கியக் கலை நிகழ்விற்கு இக் கல்லூரி அதிபர் வ. தானையா அவர்கள் தலைமை தாங்குவார். இந் நிகழ்வில் ''கலைகளும் கவின் தமிழும்'' என்ற தலைப்பில் பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர் அவர்கள் சிறப்புரையாற்றுவார்.

### மலேரியா கருத்தரங்கு

மலேரியா நோயைப் பற்றியும், மலேரியா ஒட்டுண்ணியைப் பற்றியும், மலேரியா எந்த வகையில் தடுக்கப்பட முடியும் என்பது பற்றியும் மலேரியாத் தடுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே. சிவகுரு அவர்களால் யாழ். பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையில் இன்று பி. ப. 1 00 மணி தொடக்கம் 3.00 மணிவரை செய்முறைக் கருத்தரங்கு ஒன்று நடாத்தப் படவுள்ளது.

மரநிழல்கூட

தேவைகளான மலசலகூட வசதிகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (86)

முறைசாரா

குத் தேவையான மிகுதி நிதியினை யாழ். கல்வித்திணைக்கள முறைசாராப் பகுதியினர் யாழ். மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச சபைகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு முயற்சி மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது (பா)

அன்னை

இதனையடுத்தே அன்னை திரேசா மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிடவுள்ளார்.

யைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததும், தனது அரசாங்கம் அது குறித்து ஒரு முடிவை எடுக்கும் என்றும் அதன் பின்னரே வடக்கு-கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு குறித்து இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்

புகளை அனுமதிக்கத் தயாராக வேண்டும்.

இதனுடைய நோக்கம் இனறு மிக இறுகிப்போயுள்ள இப்பிரச்சினையைத் தளர்த்துவதேயன்றி மேலும் இறுக்கமடையச் செய்வதல்ல. தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு அரசியல் சக்தியை உருவாக்க அவர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்'' என்றார்.

கப்பல் காங்கேசனுக்குச் சென்று விட்டது.

இதைத் தொடர்ந்து இக் கப்பலில் வரும் மண்ணெண்ணெயைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்காக பருத்தித் துறைத் துறைமுகத்திற்குச் சென்ற யாழ். செயலக அதிகாரிகள் ஏமாற்றத்துடன் அலுவலகம் திரும்பினர்.

கப்பல் திசை திருப்பப்பட்டதைத் தொடர்ந்து யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் திரு. பத்மநாதன் உடனடியாக கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவகத்துக்கு அவசரவானொலிச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார். மேற்படி விடயம் குறித்து யாழ். அரச அதிபர் திரு.கா. மாணிக்கவாசகர் இன்று மற்றுமொரு வானொலிச் செய்தியை கொழும்புக்கு அனுப்ப இருப்பதாகத் தெரிவித்தார். (க)

## தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை

மேற்படி பேரவை கீழ்க்காணும் விடயங்கள் பற்றி ஆர்வலர்களிடமிருந்து விடயங்களைக் கோரிநிற்கின்றது:

1) மகுட வாசகம் [MOTTO]
2) பேரவைக் கீதம்

மகுட வாசகம் இரண்டு அல்லது மூன்று சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும். பேரவைக் கீதம், எடுப்பு, தொடுப்பு, முடிப்பு, (பல்லவி, அனுபல்லவி, சரணம்) உட்படப் பன்னிரண்டு வரிகளைக் கொண்டதாக இருக்கவேண்டும். போட்டியாளர்கள் தமது ஆக்கங்களை 31 - 03 - 1993 புதன்கிழமைக்கு முன்னதாக செயலாளர், கல்வி மேம்பாட்டுப் பேரவை; 19, நாயன்மார்கட்டு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுமென வேண்டுகின்றேன். நடுவர் குழுவினால் தெரிவு செய்யப் பெறும் முதலாவது ஆக்கம் ஒவ்வொன்றிற்கும் சிறந்த பரிசில்கள் வழங்கப்பெறும்; மகுட வாசகம், பேரவைக் கீதம் என்பன தமிழீழத் தேசிய கல்வி மேம்பாட்டைக் கருத்திற் கொண்டதாக அமையவேண்டும்.

செயலாளர்

[சி/6248]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 22-03-1993

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்: 8733

வடபகுதிக்கு உள்ளே வந்தவாகன இலக்கங்கள்:

26-7187, 27-8879, 26-8051, 28-3233, 26-536, 26-3183, 24-9676, 22-6879, 42-9326. 26-6320, 28-8367, 26-4393, 26-0989, 24-4159, 26-9158, 26-3495.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-2359, 27-2056, 26-5560, 42-1059.



அமரர் தெய்வானைப்பிள்ளை கார்த்திகேசு

தோற்றம்: 01-02-1917 மறைவு: 22-02-1993

எம் கடன் பணி செய்து கிடப்பது எனும் வாக்கிற்கமைய சிவத்தொண்டு, சைவத்தொண்டு பலபுரிந்து தனக்கென வாழா பிறர்க்கென வாழ்ந்து வழிகாட்டி சிவபதமெய்திய எமதன்புத் தெய்வத்தின் ஈமக்கிரியைகளில் பங்கு பற்றி அனுதாபச் செய்திகள் அனுப்பி மற்றும் உதவிகள் பல புரிந்த உற்றார். உறவினர், நண்பர்கட்கும், இரங்கல் செய்தி அச்சிட்டு வெளியிட்ட சிவ அன்பர்களிற்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், எமது இல்லத்தில் 24-03-1993 நாளை (புதன்) நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதன்பின் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தொல்புரம் மேற்கு,
சுழிபுரம்.
(4550)

அன்புக் கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

## அ. வ. பொன்னுத்துரை

(மொறட்டுவ)

காரைநகர் ஆயிலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்பொழுது 124. நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவரும் (முன்னை நாள் பிரபல வர்த்தகர் மொறட்டுவ) அ. வ. பொன்னுத்துரை சிவபதமடைந்து விட்டார்.

இவர் மீனாட்சியின் அன்புக் கணவரும், கலாநிதி, சிவசோதி சிவராசா, சிவபாலன், சிவகுமார் (பிரான்ஸ்), சிவானந்தன் (பிரான்ஸ்), தயாநிதி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ் சென்ற தர்மலிங்கம் (உதவி வைத்திய அதிகாரி), வள்ளிநாயகி, விக்கினேஸ்வரி. யோகேஸ்வரி. புஸ்பா (பிரான்ஸ்), விக்னேஸ்வரி (கொழும்பு), திருக்குமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை 2-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

124, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(4552)

பொ. சிவசோதி
(மகன்)